November 1911. Registered No. M. 925.

உ

# செந்தமிழ்ச் செல்வம்

திரிசிரபுரத்து மாதந்தோறும் வெளிவரும்.
ஒரு தமிழ்ப் பத்திரிகை.

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

தொகுதி 1.] விரோதிகிருது-ஸு கார்த்திகை-மீ 1-உ [பகுதி-8.

தனிப் பத்திரிகை. 0—3—0.

உள்ளுறை. பக்கம்


| | |
|---|---|
| அகத்தியர். | 169 |
| காவிரியாற்றின்பெருக்கு | 170 |
| உலகப்பிரசித்திபெற்ற பண்டித ராமபாய். | 173 |
| பௌத்தமதச்சிறப்பு. | 175 |
| மனோகரன். | 177 |
| திருப்பெருந்துறை விளக்கம் | 181 |
| பொறுமை | 185 |
| மாணிக்கஜோதி. | 186 |
| விரோதக்கூற்று. | 189 |
| எலிக்குப் புருஷன் எலி. | 190 |
| ஐயவினா. | 192 |
| சமாச்சாரக்குறிப்புகள். | |


பத்திராதிபர்:— பண்டிதர், அமிர்தம். சுந்தரநாதபிள்ளை.
திரிசிரபுரம்.

வருஷசந்தா ரூ. 1. } தபாற்கூலி அணா. 4. }

Copy Right Registered.

{ வெளிநாட்டுக்கு ரூ. 2. { தனி சஞ்சிகை அணா. 2.

லெக்ஷ்மி விலாஸ் பிரஸ், திருச்சி.

# செந்தமிழ்ச்செல்வம்

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி-1.] விரோதிகிருதுஸு கார்த்திகை-மீ 1-உ [பகுதி-8

### அகத்தியர்.

(147-ம் பக்கத்தொடர்ச்சி)

நாவலந் தீவிலேற்பட்டுள்ள எந்தப் புராணங்களிலும் அகத்தியரின் சம்பந்தமில்லாப் புராணங்களில்லை. "அகத்தியர்" என்றால் அகத்தியம் எல்லார்க்குந் தெரிந்தேயிருக்கும்.

இவர்க்குப் புலத்திய இருடியின் சகோதரியாகிய குமரியார் * லோபா முத்திரை † மனைவியாம். இவள் பால் சித்தனென்னும் சுதனொருவனைப் பெற்றாரென்றுந் தெரிகின்றோம்.

சிவபெருமான் உலகுய்தற்பொருட்டுப் பருவதராஜன் புத்திரியாகிய பார்வதியை மணக்க இமயமலைக்கண் தங்கணங்களும் தேவர்களுஞ் சூழ எழுந்தருளியபொழுது இத்திருக்கல்யாணத்தைக் கண்டு பயனடைய எல்லாத் தேவர்களும் முனிவர்களும் மனிதர்களும் மற்றையவைகளும் வந்தீண்டி நெருங்கினவாம், அப்பொழுது பூமி வடபக்கங் கனங்கொண்டுதாழ தென்பக்கம் உயர்ந்ததாம். இதுகண்ட தேவர் முனிவர் முதலியோர் அஞ்சிச் சிவபெருமானிடஞ்சென்று சொல்லிக் கெஞ்சித் தம்மைக்காத்தருளவேண்டுமென்று வேண்ட அருட்கடலாகிய சிவபெருமான் கருணைகூர்ந்து அஞ்சன்மினென வடயங்கொடுத்து வடபூமியும் தென்பூமியும் சமனுறவேண்டுமானால் எனக்குச் சமத்துவமுடைய ஒருவன் தெற்கே செலல்வேண்டுமெனக் கூறினராம். இது கேட்ட தேவர்களும் முனிவர்களும் திகைத்து முழு முதற்கடவுளாகிய சிவபெருமானுக்குச் சமத்துவமுடையவரும் ஒருவருண்டோ? எமது சிவபெருமான் ஒப்புயர் வற்றவனுயிற்றே இதற் கென்செய்வதெனத் தியங்கி, அவ்வமலன்பாற்சென்று போற்றித் "தேவ தேவே! ஒப்புயர்வற்ற பொருளாயிருக்கிற தங்களுக்குச் சமத்துவ முடையவர் என்று யாரைச் சொல்வோம்" என வெல்லாத் தேவர்களும் துதித்துவேண்ட அருண்மூர்த்தியாகிய சிவபெருமான் அகத்தியரே

---

* "விதர்ப்பகோன் பயந்த லோபாமுத்திரை" என்றுஞ் சொல்லுவர்.

† கவேர ராசன் மகள் காவேரியும் மனைவியாமெனப் புராணங்கள் கூறுகின்றன. சமுத்திர கன்னிகையை மணம் புணர்ந்தனர் என்றும் அவள்பால்பெருஞ்சாகரரைப்பெற்றனரென்றுஞ்சொல்லப்படுகின்றது.

நமக்குச் சமத்துவமுடையவர் அவர் அங்குசென்றால் பூமிசமனாகுமெ னச் சாற்றினாராம். அதுகேட்ட தேவர்கள் உடனே சிவபெருமானை வணங்கி விடைபெற்றுச்சென்று அகத்தியரைவேண்ட அவரும் சிவ பெருமான் கட்டளையையும் தேவர் முனிவர்கள் வேண்டுகோளையும் மறுக்க அஞ்சி உடன்பட்டாராயினும் திருக்கல்யாணக் கோலங்காண வேண்டுமென்னும் அவாவும் தென்னாடு தமிழ் நாடாயிற்றே நமக்குத் தமிழ் தெரியாதே யென்னும் கவலையும் அவர்போவதற்குத் தடையா யிருந்ததாகவும் அதனைச் சிவபெருமான் நமக்குத்திருமணக்கோலத் தைத் திருநெல்லைப்பதியிற் காட்டுவோமென்று சொல்லியும் தமிழை முறையே அகத்தியர்க்கு உபதேசித்துக் அவர் தென்பூமிக்குப்போ வதற்குத் தடையாயிருந்த தடையை நீக்கினாராம், அகத்தியமுனிவ ரும் பிரியாப் பிரியமுடன் விடைபெற்றுத் தெற்கே புறப்பட்டு வரும் வழியில் விந்தமலையின்வீறடக்கியும், கிரவுஞ்சன் என்னும் அசுரனைமலை யாகச் சபித்தும், வில்வலன் வாதாபி என்னும் ராக்ஷசர்களைக் கொன் றும் திருக்குற்றாலத்தைச் சிவஸ்தலமாக்கியும் இன்னும் பற்பல அற் புதங்கள் செய்து சந்தனப் பொதியமலையிற் சார்ந்தனராம். *இவர் தெற்கே வந்ததும் பூமி சமனுற்றதாம். தென்னாடு செழிப்புறல் கருதி கைலாயத்திலிருந்த பூங்காவிலுள்ள தாம்பிரபரணியை பொதி யத்திருந்து தென்னாட்டிற் செல்லுமாறு விடுத்தனரென்றும் தெரிகின் றோம். தசரதபுத்திரனாகிய ஸ்ரீராமருக்கு இலங்கை யரசனாகிய இரா வணனைக் கொல்லுதற்குத் தான் மிக உதவிசெய்தாரென்றும் தெரி கின்றோம்.

(இன்னும்வரும்)

பத்திராதிபர்.

---

* வடக்கையும் தெற்கையும் சமப்படுத்துதலாவது வடக்கே குடிபுக்க ஆரியர்களின் நடை யுடை பாவனை ஒழுக்கம் முதலியவற்றைத்தென் னாட்டார்க்கும் ஊட்டியதென்று சிலரும், சிலர் வடக்கே திரள்திரளா கக்குடிபுக்க ஆரியர்கள் தெற்கேயும் குடிபுகுமாறு ஆரியர்களுக்கு விரோதமாயெழுந்ததமிழரசர்களை வயப்படுத்தியும் கொன்றும் வென் றும் ஆரியர்கள் தெற்கேயும் திரள்திரளாகக்குடிபுக ஏற்படுத்தி தெற் கையும் வடக்கையும் சமப்படுத்தினரென்றும் சொல்லுகின்றனர். இது எம்மட்டுமுண்மை யென்பதை விவேகிகளே யறிவர்.

## காவிரியாற்றின் பெருக்கு.

பகற் பொழுது தோன்றிற்று சூரியனாகிய பெரிய மன்னன் வரப் போகிறான், அப்படி வருவானாகில் அவனது கிரணமாகிய வாட்களினா லே தம்முடைய சரீரத்தைக்கண்ட துண்டமாகச் சிதைத்து விடுவா னென்று இருளாகியகுறுநிலமன்னன் செல்லுங்கால்காதங்களானவை

நாமும் நிறத்தினாலே யக்குறுநில மன்னனை யொத்தோம் ஆனது பற்றி நம்மையு மச்சூரியனாகிய பேரரசன் தனது கிரணமாகிய வாட்களினாலே சிதைத்து விடுவானென்று கருதிச் சொல்லுகின்றதாவது "நாங்கள் நிறத்தினாலே குறுநிலமன்னனை யொத்தோமே யன்றிச் செய்கையினாலே யன்று என்பதை யறிவித்தற்பொருட்டுக் காகா வென்னுங் குரலைக் காட்டித் தாங்கள் காகமே யன்றிக் குறுநிலமன்னனல்லவென்று கதறவும், இருளாகிய குறுநிலமன்னன் பதறவும், உலகத்தின் கண்ணுள்ள பலஜீவர்களி னச்சமானது சிதறவும், ஏழு பச்சைப் பரியினைப்பூட்டிய ஒருருளைத் தேரினையுடைய பரிதியானவன் வெளிப்பட்டான்.

மேற்சொல்லியபடி காலைப்பொழுதானது வந்தவுடன் திரிசிராப்பள்ளியின் கண்ணுள்ள இரண்டு மித்திரர்கள் காவிரியாற்றை நோக்கிச்செல்லுங்கால் ஒரு நண்பன் மற்றொரு தோழனுக்குச் சொல்லிய விடயமென்னவென்றால், எனது மனதுக்கிசைந்த அன்புங்குணமுமிகுந்தநண்ப இப்பொழுதுயான் மொழிகின்றதனைச் செவிசாய்த்துக் கேட்பாயாக, நான் நேற்றையகாலை சுமார் ஏழுமணிக்குக் காவிரியாற்றிற்குப்போய்தந்தசுத்திமுதலிய அனுஷ்டானங்களைமுடித்து மீளலாமென்றங்ஙனஞ் செல்லுங்கால் வழியில் அநேக ஸ்திரீகள் நீராடச் செல்வதையும், செய்து மீண்டுவருவதையும், ஆடவர்கள் நீராடுதற்குச்செல்வதையும், திரும்பிவீடுநோக்கிச் செல்வதையும், அந்தணர்கள் ஸ்நானஞ்செய்து அவர்களது மதக்கொள்கைப்பிரகாரம் பூதியும் நாமமுமணிந்து சந்தியாவந்தனமுதலிய கடமைகளைச்செய்து இல்லஞ்செல்வதையும், புரோகிதர்கள் தர்ப்பை பிடித்துச்செல்வதையும், சாஸ்திரிகள் நூல்களைப்பாராயணஞ் செய்வதையும், அநேகர் வாகனமேறிச்செல்வதையும், இன்னுமற்ற மானிடர்கள் சுருட்டுபிடித்துச் செல்வதையும், குருக்கள் சடங்கு முதலியவற்றைச் செய்யும்பொருட்டுச்செல்வதையும் கண்ணுற்றேன், வேதியர்கள் வனபோஜனமெங்கென்றும் பிராமணார்த்தமெங்கென்றும் பிறரைக்கேட்டுச் செல்வதையும் செவியுற்றேன். அதன்பின் காவிரியாற்றை யடையப்புகுமுன் சுழலிராட்டினங்களிலேறிச் சம்பாஷிக்கின்றவர்களைப் பார்த்தேன். அப்புறம் காவிரியாற்றையடைந்து அங்குநின்றுகொண்டிருந்த ஜனங்களுடன் சேர்ந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தேன்.

## ஜலத்தின் வேகம்.

காவிரியாறானது விரைந்து செல்லுகின்ற தெப்படியிருக்கிறதென்றால் புல்லறிவாளர்களே நீங்களேன் இங்கு வந்து நின்று வேடிக்கை பார்த்துக் காலங்களைக் கொல்லுகின்றீர்கள் உங்களில்லத்தேகிச் செய்யுந்தொழிலைச் செய்யுங்களென்று சொல்லித்தனது தலைமகன் தனதுவரவை யெதிர்பார்த்திருப்பானென்று அலையென்னு மோதையால்சொல்லிச் சென்றதுபோலிருந்தது. அப்படிச்செல்லும்போழ்

துசெய்யும் தர்மமென்னவென்றால், வழிநெடுகிலும் ஜனங்களுக்குத் தண்ணீர் கொடுத்துக்கொண்டும், கழனிகளில் பாய்ந்துகொண்டும், ஏரி, குளம், குட்டை முதலியவைகளை நிரப்பிக்கொண்டுஞ் செல்லு கின்றதுதான்.

## காவிரியின் தோற்றம்,

காவிரியாற்றினிருகரைகளிலுமுள்ள சோலைகளும் அதனிடையிற் செல்லுகின்ற நீரினையும்பார்த்தால் மண்விட்டின்கண் அரம்பை, கமுகு, தென்னை, பனை, மாவிலைத்தோரணம் முதலியவற்றைக்கட்டி மத்தியில் பன்மணிகளைக் குயிற்றியிருப்பதுபோலிருந்தது.

## அவற்றினலையின் தோற்றம்.

அலையைப்பார்த்தால் மானிடர்களே இங்குவந்து நீராடி மோட்சத்தைப்பெற்றுச் செல்லுங்களென்று சொல்லுவதுபோலும்; சோலையினிடத்துள்ள மரங்களே எங்களுக்குத் தங்கியிருப்பதற்குத் தண்ணியவிடமளித்தல் வேண்டுமென்று கேட்டல்போலும் பின்னுமவ்வழியே செல்லுகின்ற தகர்களையும், மேதியையும், கோக்களையும், பார்த்து நீருருந்திப்போங்களென்று சொல்லிய தன்மையை யொத்துளது.

## சோலையின் வணக்கம்.

சோலைபணிந்திருப்பதைப் பார்த்தால் தங்கள் கூட்டத்தார்முன்புசென்றுவிட்டார்களென்று கோபத்தீமூண்டு செல்லுகின்ற காவிரியாற்றைப்பார்த்து எங்களிடத்தில் நெருங்காதிருப்பீர்களென்று தலைவணங்கிக் கேட்டுக்கொள்ளுகின்ற தன்மையைப்போலிருந்தது.

## சப்தம்.

அங்கு மங்கையர்கள் துவைக்கின்ற ஆர்ப்பும், ஜனங்கள் பேசிக்கொள்வதினாலுண்டாகும் சப்தமும், சோலைகளினது ஆரவாரமும், பாலத்தின்மேனிடத்துச் செல்லுகின்ற வண்டிகளினிரைச்சலும் நீந்துவதற்காக ஆண்பிள்ளைகள் ஒருவரோடொருவர் மோதிக்கொண்டு குதித்தலினாலுண்டாகிய ஓசையுமாகிய இவைகள் ஒன்றுகூடிப்பாலத்தின் கண்ணுள்ள பெரும்புழைகளின் வழியாய்ச் செல்லுகின்ற ஜலத்தினது அதிர்ச்சியும் அலைகளினதுஓசையுமாகிய இவ்விருவகை சப்தங்களை மாறுகொண்டொலித்தது.

## மச்சம்,

மச்சங்களானது பகற்காலத்தில் வெளித்தோன்றுதிருப்பதெப்படியிருக்கிறதென்றால், மச்சங்கள் ஆகாயத்தின் கண்ணுள்ள மீனென்னும் நட்சத்திரங்களைப்பார்த்து நீங்களும் நாங்களும் உருவத்தாலன்றி மீனென்னும் பெயரையுமுடைத்தாயிருக்கிறோம். நீங்களிராக்காலத்துத்தோன்றிப் பகற்காலத்தில் மறைந்துவிடுகிறதுபோல நாங்களுமிராக்காலத்திற்றோன்றி பகற்காலத்தில் மறைந்துவிடுகிறோமெ

ன்று சொல்லிக்கொண்டிருப்பதுபோல விருந்தது. மேற்சொல்லிய வற்றைக் கேட்டுக்கொண்டு அவ்வழியே போயின கோக்களும் மேதியும், தகர்களும் காவினிடத்து வயிரார மேய்ந்து மாலைப்பொழுது தொடங்கினவுடன் காவேரிக்குச் சென்று தண்ணீரை யருந்திப்பின்னர் காடுகளி லலைவதனுலுண்டாகிய தூசிகளை நீக்கும்பொருட்டு அந்நன்னீராகிய தண்ணீரில் மூழ்கியபொழுது, மீன்களானவை அவைகளின் செருத்தத்தினிடத்துள்ள காம்புகளில் முட்டக்கன்று முட்டிப் பால் வடிகின்றதென்று தெரிந்து தனது கன்றுகளுக்குப் பால்கொடுக்கும் நேரம் வந்துவிட்டதே கன்றுகள் கதறிக்கொண்டிருக்குமே யென்றோடும்பொழுது அதன் மேனின்று வடிகிற தண்ணீரும் அன்புடன் மடியினின்று சுரக்கின்ற அமிர்தங்களும் ஒன்ருகக்கூடிப் புழுதிகளை யடக்கிச்செல்லுவது போலிருந்தது.

**S. சஙகரநமச்சிவாயன்.**

*பழநியாண்டவர் பக்தஜனசபை காரியதரிசி.*

---

## உலகப்பிரசித்திபெற்ற பண்டித ராமபாய்.

(115-ம் பக்கத்தொடர்ச்சி)

பண்டித ராமபாய் தன் நாயகன் மண்ணுலகைவிட்டு விண்ணுலகமடைந்தவுடன் முன்போல் பிரசங்கம் செய்யத் தீர்மானஞ்செய்துகொண்டாள். ஆயினும் இந்திய பெண்மக்களின் குறைகளையும் பாலிய விதவைகளின் குறைகளையும் ஜனங்களுக்கு எடுத்துப்போதித்து அதன் மூலியமாக அவர்களின் நன்மையைத் தேடுவதே இவ்வம்மையின் முக்கிய கொள்கை. ஆதலால், மனத்தில் எண்ணி அதன்படி நிறைவேற்ருது தயங்கும் மற்றவர்களைப்போ லல்லாது மிக ஊக்கத்துடன் இம்மாது சிரோன்மணி தன் மனத்தில் உதித்துப்பொங்கிவழிந்த பரோபகார சிந்தையை நிறைவேற்றுமாறு ஊர்தோறுஞ்சென்று தன்னொத்த சகோதரி சகோதரர்களுக்கு பின்வரும் விஷயங்களைப்பற்றி பிரசங்கித்துவந்தாள். அவை வருமாறு:—பெண்களுக்கு கல்விபோதிக்கவேண்டும், அநேக தீய செயல்களுக்கு காரணமா யிருக்கின்ற கொடிய பாலிய விவாகங்கூடாது; நாயகி சம்மதமின்றியே நாயகனை ஏற்படுத்தலும், நாயகன் சம்மதமின்றியே நாயகியை ஏற்பாடுசெய்தலும் கூடாது; சிறுவர் சிறுமிகள் தக்க பருவத்தில் தகுந்த நாயகி நாயகர்களை மணம்புரிய வேண்டும்; விவாக காலங்களில் அதிக பொருள் செலவிடலாகாது; ஒவ்வொருவரும் தன் ஜென்ம பூமிக்கு நன்மையைத் தேடவேண்டும்; இந்தியர்கள் யாவரும் ஒரே ஜாதியாரைப்போல் ஒற்றுமையாய் யிருத்தல்வேண்டும் என்பதும் இன்னும் இவைபோன்ற பலவாம்.

பிறகு 1882-ம் வருடத்தில் ராமபாய் பம்பாய்நகரத்திற்குச்சென்றகாலத்துக் கல்விந்துறையில் பேர்பெற்ற (Dr W. W. Hunter) டாக்டர் W. W. ஹண்டரின் அக்கிராசனத்தின் கீழ் பூனுவில்கூடிய (Education Commission) கல்விச்சாதனசபைக்கு இவ்வம்மையை பூனு நேயத்தார் வரவழைத்து கல்வி அபிவிருத்தியாகும் பொருட்டு செய்யவேண்டிய விதிகளைப்பற்றி அவளது அபிப்பிராயத்தைத்தெரிவிக்கக்கேட்டுக்கொண்டார்கள். அவ்வாறே ராமபாய் இணங்கி தன் அபிப்பிராயத்தைவெளியிட ராமபாயின் நூதனமானயுக்திகளைக்கண்டு அக்கிராசனுதிபதி அவர்கள் புகழ்ந்துபேசி அம்மையின்பிரசங்கத்தை மாராத்திபாஷையினின்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து தேசமெங்கும் பரவ விளம்பரப்படுத்தினர்.

பின்னர் இம்மாது, மேல் நாடுகளுக்குச் சென்று அத்தேயத்து நடையுடைபாவனைகளையும் பாஷைகளையும் கற்று வரவேண்டுமெனத் தீர்மானித்தனள். நினைந்தவாறு தன் சினேகிதர்களில் அநேகர் போகவேண்டாமெனத்தடுத்தும் கேளாது தன் குழந்தையுடன் பம்பாய் நகரத்தைவிட்டு இங்கிலாந்திற்கு 1883-ம்வருடம் ஜூலை மாதம் 16தேதி போய்ச்சேர அங்கு(Wantage) வேன்டேஜ் நகரிலுள்ள (St. Mary's Home) சென்ட் மேரீஸ் ஹோம் மாதர்கள் எதிர்கொண்டழைத்து உபசரித்தார்கள். அவ்விடத்தில் இவ்வம்மை கிருஷ்துவமார்க்கத்தைத்தழுவி அவ்வருடம் செப்டம்பர் மாதம் ஞானஸ்தானமும் பெற்றுக்கொண்டாள்.

இவ்விஷயத்தில் அம்மையின்மீது நம்இந்தும்தாபிமானர்களுக்கு அக்காலத்துக்கு வெறுப்பு உண்டாயினும் இவ்வம்மையின் பரோபகாரம், தயாளகுணம் தேசபக்தி இந்து உயர்குலத்து பாலிய விதவைகளுக்கு ஏற்படுத்திய தர்ம பாடசாலை முதலிய சிலதர்மகாரியங்கள் அவ்வெறுப்பை அதிக காலம் அவர்கள் மனதில் ஊன்றியிராதுபோக்கி இவ்வம்மையைப் புகழச்செய்தன.

பின்னர் 1884-ம் வருடத்தில் (Cheltenham Ladies College) செல்டன் ஹாம் பெண் கலாசாலையில் சமஸ்கிருத உபாத்தினியாக அமர்ந்தனள். ஓய்வுகாலங்களில்(Natural Science)இயற்கை சாஸ்திரம்(Mathematics)கணிதசாஸ்திரம்(English Literature)ஆங்கில பாஷை இவைகளைக்கற்று பரிட்சைகளில் தேர்ச்சிபெற்றனள். அங்கு உயர்ந்த சம்பளத்தில் வேலையில் இருக்கும்படி பலர் கேட்டுக்கொண்டார்களாயினும் தன் ஜென்மதேசம் சேரவேண்டுமென்கிற எண்ணம் அவளது இருதயத்தில் குடிகொண்டிருந்தபடியால் வேலைக்கு அவ்விடங்களில் அமரவில்லை. ஆயினும் 1886-ம் வருடத்தில் ராமபாய் அமெரிக்கர்களில் சிலர் கேட்டுக்கொண்ட பிரகாரம் அமெரிக்காவுக்குத் தன் குழந்தையுடன் சென்றனள். அவ்விடத்து மாதர்களின் வழக்க பழக்கங்களையும், கல்வி, தேசாபிமானம், முதலியவைகளைக்

கவனித்தவளவில் தன் ஜென்ம பூமிக்கு வெகு சீக்கிரமாகச் சென்று அங்குள்ள இந்திய சகோதரிகளுக்கு கல்வி புகட்டவேண்டுமென்ற எண்ணம் அவளது மனதில் பொங்கிக்கொண்டிருந்தது. ஆதலால் ராமபாய் தன் அபிப்பிராயத்தை அமேரிக்க சீமான் சீமாட்டிகளுக்குத் தெரிவித்து பொருள் உபகாரம் செய்யும்படி அவர்களைக் கேட்டுக் கொண்டனள். தயாள குணமுள்ள சில அமெரிக்கர்கள் அவ்வாறே பொருள் அளித்ததுமன்றி (Boston) பாஸ்டன் நகரத்தில் ஒரு சங்கத்தை அநேக இடங்களில் கிளைச் சங்கங்களுடன் ஏற்படுத்தி ஏராளமான பொருள் சேகரித்துக் கொடுத்து 1858-ம் வருடத்தில் San Fransisco ஸான் ப்ரான்ஸிஸ்கோ நகரிலிருந்து ராமபாயை இந்தியாவிற்கு கப்பலேற்றி விட்டார்கள்.

இம்மாது இந்தியாவை வந்தடைந்தவுடன் 1889-ம் வருடம் மார்ச்சுமாதம் பம்பாய்நகரத்தில் ஒரு தரும பெண்பாடசாலையும் இந்திய விதவைகளுக்காக ஒரு பெரிய விடுதியும் ஏற்படுத்தினள்.

இப்பொழுது ஆயிரக்கணக்கானஏழைகளும், முடமும், குருடும், செவிடும், தாய் தகப்பனற்ற பிள்ளைகளும் இன்னும் மற்றையரும் இவ் ராமபாயின் நன் முயற்சியின் பலனால் பாது காப்பாற்றப்பட்டுக் கல்வி பயின்று வருகின்றார்கள். இவ்விஷயத்தைப்பற்றி விவரித்து அடுத்தமுறை எழுதத்தவறேன். (இன்னும்வரும்.)

**J. S. நரசிம்மலு,**

## பௌத்தமதச் சிறப்பு.

(148-ம்பக்கத் தொடர்ச்சி.)

உலகமெங்கும் சர்வஜீவராசிகளுக்கும் பாவாநின்ற கருணையைக் கைக்கொண்டு பௌத்தர் வேதத்தினால் கூறப்பட்ட பிராணிஹிம்ஸைக்கு இடமான யக்ஞயாகாதிகளை மோக்ஷ சாம்ராஜ்யத்துக்குத் தேவையில்லையென்று முறையிட்டார். மற்றும் அம்மோக்ஷத்துக்குச்சாதகமான சன்மார்க்கத்துக்கேற்ற உபதேசங்களையும் நெறிகளையும், இதுவரையில் வேறு மதத்தில் சொல்லியிருப்பதைக் காட்டிலும் மிகமேன்மையாகவும் தெளிவாகவும் பூர்த்தியாகவும் சொல்லியிருக்கிறார். மனுஷனுடைய வாழ்க்கையில் ஒரு பாகத்தை யேனும் தன் சீர்திருத்தத்தினின்றும் நீக்கவில்லை; குரு சிஷ்யர்களும், ஸ்திரீ புருஷர்களும், ஸேவ்ய ஸேவகர்களும், பெற்றோர் பிள்ளைகளும், இவர்கள் எல்லோரும் ஒருவர்க்கொருவர் எப்படி நடக்கவேணும் என்று நெறிகள் ஏற்படுத்தியிருக்கிறார். இந்த சீர்திருத்தங்கள் யாவும் தம் கருணையென்னும் கொள்கைக்குச் சற்றும் விலகாது கூறப்பட்டிருக்கின்றன. இப்படி விலையற்ற கற்புகளைத் தவறாது கைக்கொண்டு நடப்போமா

கில் நமது வாழ்நாளில் அணுவேனும் மாசு ஏற்படக் காரணமில்லை. அப்படி மாசற்ற வாழ்க்கையினின்று ஓர்வித ஆநந்த பூர்வமான உலகத்தினின்று பிரிவுதோன்றும். அது தோன்றிப் புலப்படுங்கால் ஆன்மா லகுவாக இம்மானிட சரீரத்தினின்றும் அகன்று சூக்ஷ்ம சரீரத்தையடைந்து மனிதன் புலன்களுக்கு எட்டாஉலகங்களுக்குச்சென்று மேன்பதவிக்குத் தகுதியாகின்றது. அம்மேல் நிலைமையை எப்படியாகிலும் எவ்விதபேரைக் கொண்டும் கூப்பிடுங்கள்.

ஆனால் பௌத்தருடைய கொள்கைகளிலிருந்து யோசிக்குமளவில் மோக்ஷமென்பது மேற்சொல்லியதல்ல, அவர் கொள்கைகளைக் கைப்பற்றி நடப்பதினால் உலகின்கண் ஏற்படும் நல்வாழ்க்கையே மோக்ஷம் என்று தோன்றுகிறது. அவர் ஆன்மாவில் நம்புகின்றார். ஆனால் அதே ஆன்மாவானது தன் கர்மாவுக்குத் தகுந்தாற்போல் புனர் ஜன்மம் எடுக்கிறதென்கிற விஷயத்தில் அவ்வளவு தெளிவாக ஒரு அபிப்பிராயமும் தெரிவிக்கவில்லை. அதே ஆன்மா மறுபடியும் பிறக்காவிட்டால், கர்மநியாயம்(Karmie Law) என்பது தவறுகிறது. ஏனெனில் கர்மநியாயத்தின்படி அவனவன் செயல்களுக்குத் தகுந்தபடி அவனவன் மறுபிறப்பெடுத்து அனுபவிக்கிறான் என்பதுதான். பின்னும் பௌத்தருடைய கொள்கைப்படி ஒருவன் ஆன்மைக்கியமில்லாது மறுபடியும் பிறப்பானென்று எண்ணுவோமாகில் அவனுடைய செய்கைகள் அவன் பின்வருவோர்களின் பேரில் தாக்குகிறதென்பது ஓர்வித சமாதானமாகும்.

இம்மாதிரி பௌத்தமதத்தினால் உலகத்திற்கு ஓர் பெரிய நன்மை செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மதத்திலும் முக்கியமாய் இரண்டு பாகமுண்டு:- மோட்ச சாதனமாக கடவுளினில் இருக்கும் ஓர் நம்பிக்கையும். அதே மோட்சத்துக்குச் சாதனமான ஓர் இகலோக நன்னடக்கையும், இவ்விரண்டிலும் பௌத்தர் கொள்கைகளைச் சரியாய் அநுசரிப்போமாகில் மதத்தின் முக்கியமானதாயுள்ள இரண்டாம்பாகம் நன்கு முடிவுபெறுகிறது. மாசற்ற வாழ்க்கையே மோக்ஷம் என்கிற பதவிக்குக்காரணம். கடவுளினில் நம்பிக்கை யென்பது சற்றுயோசனைசெய்து பார்க்குமளவில் இம்மாசற்றவாழ்க்கைக்கு ஏற்ற நன்னெறிகளினின்றும் சிறிதும் வழுவாது நடப்பதும், அந்நெறிகளையே பின்னும் தத்தஞ்செய்கைகளின் பயனினால் கைப்பற்றுதலுமே தான் என்பது நன்கு விளங்கும். நம்பிக்கை யென்பது கடவுளோ, வேறு எவ்விதக் கடவுளெனக் கருதிய வஸ்துவோ, அதில் நம்மைப்பற்றுத ஞாபகமட்டுமல்ல, ஆனால் அவ்வுயர்ந்த புத்தியைக் கொண்டு நமது செயல்களை அக்கடவுளனுக் ஞாபகானுகுணமாய் நடப்பிப்பதே கடவுளில் நம்பிக்கையாகும்.

ஆதலால் ஒருவன் சன்மார்க்கத்தில் நடக்கவேண்டு மென்பதையே, சன்மார்க்கத்தில் நடப்பதற்குப் பலனாகவும், அம்மாதிரி நடப்ப

தையே எவரை அல்லது பரலோக நன்மையைக் குறித்துத் திருப்தி செய்யவேண்டுமென விரும்புகிறாரோ, அவரை அல்லது அதையே திருப்திசெய்ய வழியாகவும் எண்ணி, சன்மார்க்கத்தில் தளராதுநிலை நின்று தன் சரிதத்தை புனிதமாக்குவானாகில், அவனுக்கு மதத்தினால் யாதொரு பதவி பரலோகசாத்தியமோ அது கிடைப்பது நிச்சயம். விதைபோட்டு நன்கு பாதுகாக்க அதற்கேற்ற பயன் எங்கு போம். இவ்வண்ணம் வேறு எம்மதத்திலும் நல்வழிக்கேற்ற முறைகள் போதிக்கப்படவில்லை. இப்படிப்பட்ட கற்புகளில் சிறந்த கிறிஸ்துமத உபந்நியாசகரான இயேசுகிறிஸ்துநாதரே வருவதற்கு சுமார் அறுநூறு வருஷங்களுக்கு முன்னர் பௌத்தர் அவதரித்து அவர் துறைகளிலேயே நடந்து உலகத்துக்கு ஞானோபதேசங்களைச் செய்திருக்கின்றனர்.

முடிவில், இம்மதமானது இந்தியாவின்கண் தோன்றி, பின் சுமார் பத்து நூற்றாண்டுகள் அதே பூமியில் ஓங்கி வளர்ந்து மிக உன்னத ஸ்திதியையடைந்த போதிலும், இப்போது இந்தியாவில் அம்மதானுசாரிகளற்று, முக்கியமாய் ஆசியாகண்டத்தில், திபேத்து சைனா, ஜப்பான் முதலிய தேசங்களில் பிரதான மதமாய் வழங்கிவருகிறது. ஆயினும் இம்மதம் தன்னுடைய விலையுயர்ந்த கொள்கைகளை அன்னிய மதங்களுக்குக் கொடுத்து அவைகளை மிகச்சிறப்பித்திருக்கின்றது. இம்மதோத்தியாபகரானை பௌத்தரும் நாளைக்கும் நல்வழியில் நடப்போர்க்கும் நடக்காதவர்க்கும் போறிவுக்கு ஓர் உருவம் போல் நின்றுகொண்டு நன்மார்க்கத்தில் அவர்களை தூண்டுகிறார் போலும்.

S. திருவேங்கடாச்சாரியார்.
S. P. G, High School, Trichinopoly.

## மனோகரன்.

161-ம் பக்கத்தொடர்ச்சி.

ஆகாயம் மிகவும், கார்மேகங்களுடன் கூடியதாய் இருண்டிருந்தது. அடிக்கடி மின்னலின் ஒளியையும் மேகங்களின் கர்ஜனையும், பார்ப்பதற்கும் கேட்பதற்கும் அதிகபயத்தைக்கொடுத்தது. நக்ஷத்திரங்களின் ஒளியானது மேகத்தின் நடுவில் அடிக்கடித் தோன்றுவதினாலும், மின்னுவதால் உண்டாகும் வெளிச்சத்தையும் தவிர்த்து வேறு பிரகாசத்தைக்காணோம். ஓர் பெரும்புயலுடன்கூடிய மழை வருமென எதிர்பார்த்தோம், ஆனால்ஒன்றையுங்காணோம். எத்திசையிலும் அந்தகாரமாயிருந்த நள்ளிரவில் அநேக மரங்களினிடையில் பூர்ணசந்திரன் பிரகாசிப்பதுபோல்ஓர் ஒளி வீசிற்று. சந்திரனென்றால் உலகமுழுவதிற்கும் பிரகாசத்தைக்கொடுக்கக் கூடியதாயிற்றே!

மின்னலெனில் ஒளியைவீசி உடனே மறையுங்குணமுள்ளதாயிற்றே! சூரியனுக்குஒப்பிடலாமெனில்இராக்காலமாயிற்றே! எனச்சந்தேகத்துடன்வெளிச்சந்தோன்றின இடத்திற்குச் சீக்கிரமாகச்சென்றேன் சந்தேகம் நிவர்த்தியாயிற்று எப்படியெனில், பலவர்ணவாணங்களின் ஒளியும் மத்தாப்புகளின் ஒளியையும் கண்டேனே யல்லது வேறு விதமான பிரகாசத்தைக்காணகிலேன்.

ஜனங்கள் அதிக கும்பலாய்க்கூடியிருந்தார்கள். யாதுகாரணம் பற்றியெனத் தெரியவில்லை. நள்ளிரவில் யாவரும் நிஸ்ஸப்தமாயிருக்கும் தருணத்தில் இக்காட்டில் இவ்வளவு கும்பல கூடுவதற்கு காரணம் யாது சிறிதும் யோசிக்காது ஆங்கு தனிமையாயிருந்த ஒருவனை கேட்டதில் காளிக்குப் பூசைபோடப்போகிறார்கள் என்றான். எனக்கு சற்றும் விளங்கவில்லை, அவனை மறுதரம் கேட்போமெனில், செவிடன் அல்லது மடையன் எனக்கூறிவிட்டால் யாது செய்வது என மதிமயங்கி சிறிது ஆலோசனையிலிருந்தேன். நான் யோசிப்பதை அறிந்த அவ்வந்நியன் என்னை ஏறிட்டுப்பார்த்தான். நான் திகிலடைந்தேன்.

அந்நியன்:—நீ யார்? எனக்கேள்வி கேட்கவே நான், ஓர் பிரயாணி வழிதப்பி இக்காட்டினுள் வந்துவிட்டேன். இங்கு வெளிச்சத்தைக்கண்டேன் யாராவது நம்மை யுபசரித்து வழி காட்டுவார்கள் என எண்ணி வந்தேன். தாங்கள்தான் வழி காட்டவேணும் என்று மன்றாடினேன். ஏன் அவரையே தொடர்ந்தேனெனில் அவரிடத்தில் எனக்கு ஓர் விதமான பிரியம்ஜனித்தது. ஆங்கு கூடியிருந்த ஜனங்களின் உடையையே இவரும் தரித்திருந்த போதிலும் அவர்களைவிட இவர் லக்ஷணமாயும், கம்பீரமாயுமிருந்தார். "அகத்தினழகு முகத்தில் தெரியும்" என்பதற்கேற்ப இவர் மனத்தில் ஓர் விதமான கவலை கொண்டிருப்பதை அறிந்தேன், அதிலிருந்து நமக்கு ஏதாவது சகாயம் தோன்றுமென எண்ணியே அதை யறியவேண்டி அவரைச்சுற்றினேன். அவரும் தான் செய்யப்போகிற காரியத்திற்கு ஒருதவிவேண்டி எதிர் பார்த்தார் போலிருக்கிறது. அதற்கு நானே தகுந்தவனென் றெண்ணி எனக்கு வழிகாட்டுவதாக கொஞ்சதூரம் கூட்டிக்கொண்டுபோய் ஓர் மரத்தைக்காட்டி ஒரு பிஸ்தூலைக்கொடுத்து, தான் அங்கேயே யிருந்துகொண்டு என்னைகொஞ்சதூரம்போய், குறிவைத்துசுடும்படி கூறினார். நான் என்னை பரிசோதிக்கவேண்டி சொல்லுகிறாரென எண்ணி அப்படியே செய்வதாக ஒப்புக் கொண்டேன். நான் துப்பாக்கி சுடுவதில் சிறிது பழகியிருந்தேனாதலால் குறிதவறாது சுட்டேன். உடனே அவர் என்னை மெச்சிக்கொண்டார். பின் நீ யான் கூறப்போவதை செவி கொடுத்துக் கேட்டு அதன்படி நடக்கவேண்டும். அப்படியில்லாது சற்றேனும் அலக்ஷியம் செய்வாயாகில் தற்காலம் நீ யென் ஆக்கினையின் கீழிருப்பதால், சற்றும் தாமதியாது சுட்டுவிடுவேன் என்றார்.

நான் மிகவும் பயந்தவனுய், வருவதெல்லாம் நன்மைக்கே என் னுங்கோட்பாட்டை மேல்கொண்டு, என்மனதைச்சற்றுதிடப்படுத்திக் கொண்டு, அப்படியே நடப்பதாய் ஒத்துக்கொண்டேன். ஆகிலும் சிறிது கலவரமடைந்திருந்தேனுதலால் அவரைநோக்கி யான் யாது செய்யவேண்டும் ? எதற்காக ? என்னும் கேள்விகளைக் கேட்டேன். அதற்கு அவர் சிறிது அதிகாரத்தொனியுடன் நீ காரியமுடியும்வரை யில் ஒன்றும் பேசக்கூடாது. எல்லாம் சற்று நேரத்தில் வெளிவரும் என மொழிந்தார். என்னை ஓர் மரத்தின்மேல் ஏறச்சொன்னர் அப் படியே இருவரும் ஏறினேம். எங்களுக்கு ஆங்கிருந்து கீழ் நடக் கும் விஷயங்கள் யாவும் நன்று விளங்கிற்று. அந்தப்பெருங்கூட்டத் தின் மத்தியில் ஓர் வெண்மையான கோபுரம் துலங்கிற்று. அக்கோ புரத்தினழகை யாரே உரைப்பது, ஆஹா ! என்ன அழகு ! முற் காலத்தில் இப்படியும் சிற்பிகள் இருந்தார்களோ அல்லது தேவர்கள் நிர்மாணம் செய்தார்களோ என விம்மிதமாயிருந்தது.

கோயில்தான் அதி ஆச்சர்யமா யிருந்த தென்ருல் அதினுள்ளி ருக்கும் காளிகாதேவியின் ரூபத்தை யாரே வர்ணிப்பது. ஓங்காளி யின் உருவமானது கம்பீரமான முகமும், மனோகரமான லலாடமும், பெரியகண்களும், அவைகளின் சக்தியால் யாவருக்கும் ஓர் விதமான பக்தியும், அவர்களை அடக்கக்கூடிய துமாயிருந்தது. இந்த சிலையை சிருஷ்டித்தவன் வாஸ்தவமாகவே ஓர் பெருந்திறனுகயிருக்கவேண்டும், தற்காலம் ஜனங்கள் எப்படி ரவிவர்மாவைப் போற்றிவருகிருர்களோ அதைவிட பதின்மடங்கதிகமாகப் போற்றவேண்டும். அன்றைய தினம் காளியின் வருஷோத்ஸவமானதால் அவ்வளவு ஜனங்களைநாம் காணநேரிட்டது. அது நமது அதிர்ஷ்டவசமே ஏனெனில் நமது கதாநாயகனைப்பிரிந்து வெகு நாளாகிறது. அவனை ஒருக்கால் காண நேரிடுமன்ருே ! இந்த ஜனங்கள் நம்மை யேன் காணவில்லை யென் ருல் அவர்கள் சந்தோஷ சாகரத்தில் மூழ்கி யிருந்ததாலும் நாங்கள் அவர்களைவிட்டு விலகி ஒளிந்திருந்ததாலும்தான்.

தடதட, மடமட, தடதட, தத்தோம், தாம்தீம் என மேளவாத் தியங்கள் முழங்கின. அதனது ஒலியானது இடி இடிப்பதுபோலி ருந்தது. உடனே கூட்டமாயிருந்த ஜனங்கள் சிறிதுசிறிதாய் விலகி வரிசையாக நின்ருர்கள். என்பக்கத்திலிருந்தவர் நமது அதிர்ஷ்டம் தான் என்ருர் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. “மௌனம் சர்வத்ர சாதகம்” என வாய்திறக்காதிருந்து விட்டேன். சந்நிதியில் தூப தீப நைவேத்தியங்கள் முதலியன நடந்தேறி சர்வலக்ஷணங்களும் பொருந்திய ஓர் நாரீரத்னம் ஓர் பாலகனை எடுத்து வந்தாள். அவள் மிககண்ணீருடன் அந்த சிசுவை காளியின் பாதத்தடியில் விட்டுப் போனுள். அவள் யார் ? ஏன் அழுதாள் ? குழந்தையார் ? ஒன்றும் விளங்கவில்லை.

குழந்தையோ சர்வலக்ஷணங்களும் பொருந்தியதா யிருந்தது. மிகவும் ஆச்சர்யமே! அதைப்பார்த்த உடனேயே எம்மனத்தில் ஓர் விதமான ஆவலுதித்தது. பாலகனை முன் பார்த்ததுபோலுமிருக்கு என்சிநேகிதரைக்கேட்டேன் அவர் இந்தக்குழந்தையைத்தான் இன்று பலியிடப்போகிறார்கள் என்றார். என்தலையில் இடி விழுந்ததுபோலிருந்தது. நிரபராதியாயும் லாவண்யம் பொருந்தியதாயுமிருக்கிற ஓர் சிசுவை யாதுகாரணம்பற்றி வதைக்கவேண்டும். அவர்களுக்கு மனம் எப்படித் துணிந்ததோ அறியோம்! குழந்தையை பலியிட்டதினால் காளிதேவியின் மனம் திருப்தியடையுமோ? ஒருக்காலுமில்லை. அந்த எண்ணம் சர்வமூடர்களுடையதே. நமது மனம் ஏன் அதனிடத்தில் சென்றதெனில் அக்குழந்தை ஓர்வேளை நம் கதாநாயகனாகிய மனோகரனாயிருக்கலாகாதோ என என் மனம் வாடிவதங்கிற்று. நான் மிகவும் தூரத்திலிருந்ததால் பார்க்கமுடியவில்லை.

பாலனானவன் அம்பிகையின் பாதத்தடியில் தவழ்ந்து விளையாடுவதை நோக்கில் "தாயே, நிரபராதியாகிய என்னை கிஞ்சித்தும் ஈவு இரக்கமில்லாத இந்த பாதகர்கள் உனக்கு பலியிடப்போகிறார்கள். அதனால் உன் மனம் சிறிதும் திருப்தியடையாது. இந்த அபாரமான இக்கட்டிலிருந்து நீயே என்னைக் காக்கவல்லவள்" என முறையிடுவதைப்போலிருந்தது. பலியிடும் காலம் சமீபித்தது. இருவர் கறுத்த மேனியும், குறுகிய உருவமும், நீண்ட பற்களும், பெருத்த தேகமும், பயங்கரமான கண்களுமுடையோராய்உள் வந்தார்கள். ஒருவன் கையில் கூறியவாளுடனிருந்தான். மற்றவன் பாலகனை நிமிர்த்தினான். அவனது கோரரூபத்தைக் கண்டதும் அது வீறிட்டுக்கதறத்தொடங்கிற்று. அச்சமயத்தில் என்நண்பர் வாள்வைத்திருப்பவனைக்குறிவைத்துச் சுடும்படி என்னை ஆஞ்ஞாபித்தார். இருவரும் சுட்டோம். குழந்தையைப் பிடித்திருப்பவன்மேல் அவர் சுட்டார். இருவரும் பெருத்த சப்தம் செய்துகொண்டு கீழ் விழுந்தார்கள். ஓர் பெரிய கலவரம் உண்டாயிற்று. நாங்களும் திருடர்களது உடையைப்போட்டிருந்தோமாதலால் அவர்களைப்போல் கூட்டத்தை விலக்கிக்கொண்டு கோயிலினுட் சென்றோம். குழந்தையை யாரோ தூக்கிக்கொண்டு போய் விட்டார்கள். என் நண்பரது முகம்மலர்ந்தது. அவர் கார்யமுடிந்தது நாம் செல்லலாமென்றார். உடனே புறப்பட்டோம். போகும்பொழுதே சமாச்சாரத்தை விளங்கச்சொல்லிக்கொண்டே புறப்பட்டார். நான் குழந்தை யாரெனக்கேட்டேன், தெரியாதெனப்பகர்ந்தார். ஆனால் அவர் தான் பக்கத்துக்கிராமத்தில் ஓர் உத்தியோகஸ்தர் என்றும், அங்கு குழந்தையை விட்டமாது தனக்கு தெரிந்தவளென்றார். அத்திருடர்களுள் ஒருவன் அந்த நங்கையை ஓர் நாள் திருடி வரும்பொழுது அவர்களது தலைவன் பார்த்து தன்னிடத்தில்] விடும்படி கேட்டான். (தொடரும்) வை. நாகநாதன்.

## திருப்பெருந்துறை விளக்கம்.

(154-ம்பக்கத் தொடர்ச்சி.)

குருமூர்த்திக்குத் தாஞ்சாத்தின செங்கழுநீர்ப் புஷ்பமாலையையே, மாலையாகவுங்குருமூர்த்தியின் றிருமேனியிற் பிரகாசித்து விளங்கிய திருநீற்றுப் பூச்சையே துவஜமாகவும் புகழ்ந்து கூறின சுவாமிகள், தமது குருமூர்த்தியாகிய சிவபிரான் மதுரைமா நகரத்தில் பரிமேலெழுந்தருளிய திருக்கோலத்தைப் பிரத்தியட்சமாகத் தாம் தெரிசித்தவாறு "அரியோடு பிரமற் களவறியாதவன், பரிமாவின் மிசைப் பயின்ற வண்ணமும்," எனத்தம் மனங்களித்தவாறு புகழ்ந்து பேசினார். சிவபெருமானுக்குச்சிறப்பான ஊர் திரிடபமாயிருக்கச் சுவாமிகளுந் தம்பாடல்களிலநேக விடங்களிலவ்வாறே கூறியுமிருக்க விவ்விடங் குதிரையை யேன் வாகனமாகக் கூறவேண்டும்? அவ்வாறருளியதெதனாலெனிற் சுவாமிகள் தங்கண்களால் குதிரை மேலெழுந்தருளின குருமூர்த்திகளின் திருக்கோலத்தைத் தெரிசித்தமையாலெனவுணரவேண்டும். இன்னமும் விரிக்குங்கால், 'அரியோடு பிரமற் களவறியாதவன்,' என்று வியந்தமையானது, சிவபெருமானது திவ்யமங்களசொரூபம் பெருந்தேவர்களாகிய பிர்ம விஷ்ணுக்களாலுமளவிட்டு அறியுந் தன்மைத்தன்றாயிருக்க மதுரைமாநகரத்தில் அரசர் வீதியிற் கேவலம் மானிடராகிய வெல்லோருங் காணத் தம் பொருட்டுக் குதிரையின்மேல் ஒரு மானிடச் சட்டை சாத்தி வெளிவந்த தன்மையையுங் குறிப்பாய்க்காட்டிற்று. இன்னமும், 'எந்தமையாண்ட பரிசது பகரின்' என்றாரம்பித்துக்கொண்டு தாந்தெரிசித்த கோலத்தின் பொலிவு ஒவ்வொன்றையுமே, பத்து அங்கங்களுமாக வெடுத்தருளினமையால், ஒவ்வொரு அங்கத்தையும் கூறும் வாக்கியத்துக்குமுன் 'எந்தமையாண்ட பரிசதுபகரின்' என்பதை அமைத்துக்கொண்டு பொருள் கொள்ளவேண்டும். எவ்வாறெனில் எந்தமையாண்ட பரிசதுபகரின் ஆற்றலது வுடையழகமர் திருவுரு நீற்றுக்கோடி நிமிர்ந்து காட்டியும் எனவும், மறுபடியும் எந்தமையாண்ட பரிசதுபகரின், ஊனந்தன்னை யொருங்குடனறுக்கு மானந்தம்மே யாறுவருளியும், எனவும் மற்றுமிவ்வாறே அமைத்துப் பொருள் கொள்ளவேண்டும். (இவ்வண்ணம் பொருள் கொள்வதைவிட வேறு வகையிருக்குமானல் நமது நண்பர் விளக்கிக்காட்டவேண்டும்) இவ்வாறு பொருள் கொள்ளுங்கால் 'எந்தமையாண்ட பரிசதுபகரின்' 'அரியொடுபிரமற் களவறியாதவன்,' 'பரிமாவின்மிசைப் பயின்றவண்ணமும்' எனக் கொள்ளக்கிடக்கிறது. இதன் பொருளாவது என்னையாண்ட தன்மையைச்சொல்லுமிடத்துக் குதிரையின்மேரி லெழுந்தருளிக் காட்சி கொடுத்த கோலமுமெனத் தெளிவாய் விளங்குகிறது. நரிகளைக் குதிரைகளாகச் செய்ததை யிங்கு சொல்லவில்லையே யெனச் சிலர் வினவலாம். தசாங்கஞ்சொல்ல

வந்தவிடத்து அவைபல்லாமல் வேறுவிஷயஞ் சொல்வது மிகை. ஆன தாலகந்ு விரிக்கவில்லை. இக்கீர்த்தித் திருவகவிலேயே;மற்றோரிடத்து

' அரியொடு பிரமற் களவறி யொண்ணான் '
' நரியைக் குதிரை யாக்கிய நன்மையும் '
' ஆண்டு கொண்டருள வழகுறு திருவடி '
' பாண்டியன் றனக்குப் பரிமாவிற்று '
' ஈண்டுகனக மிசையப் பெறா அது '
' ஆண்டானெங்கோன் ருள் வழியிருப்பத் '
' தூண்டுசோதி தோற்றிய தொன்மையும் '
' அந்தணனாகி யாண்டுகொண்டருளி '
' இந்திர ஞாலங்காட்டிய வியல்பும் '
' மதுரைப் பெருநன் மாநகரிருந்து '
' குதிரைச் சேவகனாகிய கொள்கையும் '
' ஆங்கது தன்னிலடியவட்காகப் '
' பாங்காய் மண்சுமந்தருளிய பரிசும்.'

எனச் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியிருப்பதை யிங்கு கவனிக்கவேண்டும். மாணிக்கவாசக சுவாமிகள், தம்மையாட் கொள்ளும் பொருட்டுக் கடவுள் நரிகளைப் பரிகளாக்கியதும், அப்பரிகளைப் பாண்டியனிடம் விற்றதும் அப்படி விற்றதற்குப் பொருள் பெறாததும், பிட்டு வாணிச்சியம்மைக்குக் கூலியாளாகவந்து மண் சுமந்ததுமாகிய விவ்வித அற்புத லீலைகளைப் புரிந்தமையைத் தொடர்ச்சியாகப் படிப்பவருடையவுங் கேட்பவருடையவும் உள்ளம் நெக்கு நெக்காயுருகுமாறு அருளிச்செய்திருக்கிறது, மேல் வாசகத்தில் "அந்தணனாகியாண்டு கொண்டருளி, இந்திர ஞாலங்காட்டிய வியல்பும்" என்றருளியதை யிங்கு விசேடமாய்க் கவனிக்கவேண்டும். பிராமணத் திருமேனிகொண்டு ஆசாரிய மூர்த்தியாய்த் தம்மை ஆட்கொண்ட சிவபெருமான் இந்திரசால வித்தையைத் தமக்குக் காட்டினரென்று இதில் கூறியிருக்கிறது. இவ்வாக்கியத்துக்கு பொருள் கொள்வதில் மேல்நாட்டாராகிய ஜி. யு போப்பையரவர்களும் அடியில் வருமாறு மொழிபெயர்த்திருக்கிறார்கள்.

"Becoming a Brahmin, graciously making me His own, He shewed the magic illusion"

தம்மையாட்கொள்ளக் கடவுள் இந்திரசால வித்தை காட்டினரென்றே மாணிக்கவாசக சுவாமிகள் அருளியதாகப் போப்பையர் பொருள்கொண்டதாகவும் நிர்விவாதமா யேற்படுகிறது. போப்பையரோ சாமானியரல்லர், ஆங்கில நாட்டுக் கல்விமானாதலினால் சுய பாஷையாகிய ஆங்கிலத்தில் மஹா நிபுணரென்று சோல்லாமேயமையும். தமிழ்ப் பாஷையிலோ பஞ்ச விலக்கணமுங் கற்றறிந்த மஹா வித்துவ சிரோன்மணி, மேலும் புறமதத்தாரானதினால் அந்நிய

டிதங்களில் நிர்பட்சவாதி, இவரே மாணிக்கவாசக சுவாமிகள் தம் பொருட்டே கடவுள் இவ்வித இந்திரசால வித்தை காட்டினதாகப் பொருள்படும்படி அருளியதாய்த் திருவாசகந் தக்குமொழி பெயர்த் திருப்பதைத் தமிழ் நாட்டுச் சைவசெல்லோருங் கவனிக்கவேண்டும். போப்பையர் பெருமையையும் திருவாசகத்தினிடம் அவர் கொண்ட கருத்தும் இடம் வந்துழி விரிப்பாம். இந்திரசால வித்தையின்னதென பதைப்பல்லோருமறிவார்களாயினும் எங்கருத்தையும்வெளியிடுவாம். ஆகாயத்தினிடத்தே ஒரு நிமிஷத்துக்குள் பல்லாயிரம் ஆனைப்படை, குதிரைப்படை போர் வீரர்கள்கூட்டம் இவைபோன்ற பிறவுந்தோன் றச்செய்து அடுத்த நிமிஷத்திலக்காட்சி முழுவதையும் மறையும்படி செய்யும் ஒரு வித்தை. இவ்விடத்தில் இந்திரசால வித்தையைக் கடவுள் காட்டினரென்றார். ஏனெனில் சிறுநேரத்துக்குள் குதிரைப் படைகளையும் போர் வீரர்களையும் மதுரைமாநகரம் முற்றுங்கலங்கும் படிக்கும் களிக்கும்படிக்கும் காட்டிச்சீக்கிரத்தில் நரிகளாகச்செய்து காட்டகத்தோடும்படி செய்து விளையாடினதற்கேற்க வென்று கொள் ளக்கிடக்கிறது.

நமது கவிவாணர்களாகிய சைவப்பெரியோர்கள், மஹான்கள் சரித்திரங்களை நூல்களாகச் செய்திருப்பதில், அந்த மஹான்கள் அருள்வாக்கில் எச்சமையத்தில் எநிமித்தம் எப்பதங்கள் உதித்த னவோ அப்பதங்களைத்தானே அச்சரித்திரங்கூறப்புகுஞ் செய்யுட்க ளில் அப்படி அப்படியே வைத்தமைத்திருக்கிறார்கள். இது விஷ யத்தில் நமது சேக்கிழார் சுவாமிகள் மிகச்சிறப்புற்றோர். தேவா ரத்திலுள்ள அநேக வாக்கியங்களை அவர்களியற்றிய பெரியபுராணத் தில் ஆங்காங்கு அப்படி அப்படியே யெடுத்தாண்டிருக்கிறார்கள். பெரும்பற்றப்புலியூர் நம்பிகளும் மஹாகவியாகிய கம்பரும் அவ்வா றே. நமது பரஞ்சோதியாருமிதிற் பின்னிடவில்லை. பரஞ்சோ தியார் தாமியற்றிய திருவிளையாடல் நரிபரியாக்கிய படலத்தில், நரி களைப்பரிகளாக்கி மதுரைமாநகரத்தில் வீதியின்கண் அப்பரிகளைக் கொண்டு வருமமையத்தைப் புகழும்போதியற்றிய, ௫அ-வது செய் யுள் வருமாறு.

> "இச்சையால் வடிவெடுப்பவனிந்திரசால
> விச்சைகாட்டுவானெனப் பரிவீரனிவுலகம்
> பிச்சதேற்றிட மயக்கியுங் காமனிற்பெரிது
> நச்சமாதரை மயக்கியுமிங்ஙனம் நடந்தான்"

என்பதே. ஸ்ரீவாசகம் கீர்த்தித்திருவகவில் கடவுள் குதிரை கொண்டு வந்தவமையத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் "இந்திர ஞா லங்காட்டிய வியல்பும்" என்றருளியதையே பரஞ்சோதியாரும் "இந் திரசாலவிச்சை காட்டுவானெனப்பரி வீரனில்" என்று குதிரைகள் வந்த அமையத்திலேயே யெடுத்தாண்டிருப்பதின் வியப்பையும் நயத்

தையும் இதை வாசிக்கும் நண்பர்கள் கவனித்து ஆனந்த முறுதிரார்களென்று நம்புகிறேன். பெரும்பற்றப் புலியூர் நப்பியாரும் அவர்கள் இயற்றிய திருவிளையாடற்புராணம் உகூ-குதிரை நரியான திருவிளையாடலில் முதலுள்வந்த அருமையான குதிரைகளெல்லாம்நரிகளாய்ப் போனதைக்கண்ட பாண்டியன் தனது மந்திரியாராகிய வாதபுரீஸ்வரரைக் கோபிக்கு மமையத்திற்கூறிய கூ-வது செய்யுள் வருமாறு.

"வெந்திறற்சிவையை யெல்லாம் வெம்பரியாக்கியின்றென்"
"மந்துரை தன்னுட்கட்டப் பண்ணினைமதிமயக்கி"
"யிந்திரஞாலஞ் செய்வதென்னுடனேயோசாதி"
"அந்தணனுயான் மற்றறைவதிங்கென்னைகின்னை"

என்பதே. இச்செய்யுளிலும் ஸ்ரீவாசகத்தில்மேற்காட்டிய கீர்த்தித்திருவகவில் சுவாமிகள் வாக்கிலுதித்த "இந்திர ஞாலங்காட்டிய வியல்பும்" என்ற அருண்மொழிகளையே அமைத்து அதற்குப்பொருளின்னதென்பதையுந் தெரிவித்திருக்கின்றதையும் தீந்தமிழ்வாணர் பல்லோருங்கண்டு ஆனந்திப்பாரகளாக.

இதுகாறு மெடுத்துக்காட்டியவற்றால் நரிபரியாக்கியது முதலிய திருவிளையாடல்களைத் தம் பொருட்டே கடவுள் செய்தனரென்று மாணிக்கவாசக சுவாமிகளவர்கள் திருவாக்கில் அருளியிருப்பதை மலையிலக்காகக்காட்டப்பட்டது. இனியும் மகா-ா-ா-ஸ்ரீ கோபிநாதராவு அவர்கள் ஆசங்கைகொள்வார்களேயானல் மேலே உதகரித்த வாக்கியங்களுக்குப் பொருள் எல்லோருமறிய விரித்துரைக்குமாறு அவர்களை வேண்டுகிறேன் இம்மட்டோடே இவ்விஷயத்தை நிறுத்தித் திருப்பெருந்துறை யென்னுந்தல மெவ்விடமுள்ள தென்பதை மேல் II-ம் பாகத்தில் ஆராய்வாம்.

## II ம் பாகம்.

இவ்வியாசத்தில் மாணிக்கவாசக சுவாமிகளுக்குக் கடவுள் ஞானாசாரியராக வெழுந்தருளி ஞானோபதேசஞ் செய்த திருப்பெருந்துறையென்னுந்தலம் பாண்டிநாட்டிலுள்ள ஆவுடையார்கோவில் என்னுந்தலமே யென்றும் சிலர் அபிப்பிராயப்படி மலையாளநாட்டிலுள்ள வைக்கம் திருப்புணித்துறை முதலியவல்லவென்றும் புராதன நூன் மேற்கோளுடன் காட்டப்படும்.

தமிழ் பாஷையில் அபிமானமுள்ளவர்களும் தமிழ் வித்துவசிரோன்மணிகளும் மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திர ஆராய்ச்சியில் ஆவலுள்ளவர்களும் இவ்விரண்டாம் பாகத்தை வாசித்து 'எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினு மப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு' என்னும் வேத மொழிக்கிலக்கியமாகியவரவர்கள் கருத்தைத் தயைசெய்து வெளியிடுவார்களென்று நம்புகிறேன்.

(இன்னும்வரும்) திரு. சாம்பசிவம்பிள்ளை.

(Retired Sub-Magistrate, Trichinopoly.)

# பொறாமை.

பொறாமை அழுக்காறு என்பன ஒருபொருட் சொற்கள்.

பொறாமை என்பது பிறர் செல்வ முதலியன கண்டவிடத்து மனஞ் சகியாமையாம். இதனைப் பொறாமைக்கு எதிரிடை என்னலாம்.

பொறாமை யுடைய வொருவன் நல்லொழுக்க முடையனாதல் அரிதாகும்.

பகைவரிடத்தும் பொறாமை கொள்ளாதிருப்பதைப் பெறின் அவன் பெறாத தொன்றுமில்லை.

இவ்வுலகில் நித்தநிரைப்பையும் அவ்வுலகில்நாகத்தையும்விரும்புபவரே பொறாமையைக் கைக்கொள்ளவேண்டும். இருமையிலும் துன்பஞ்செய்யுந் தன்மையுடையதென்றுணர்ந்தே அறிவுடையோர் அழுக்காற்றினால் பிறர்க்குத் தீங்கு நினைத்தலும் சொல்லலும் செய்யலுஞ் செய்யார். பொறாமைகொண்டாரை அழித்தற்கு வேறு பகைவரே வேண்டுவதில்லை. அவரவர் கொண்டுள்ள பொறாமையே போதும். ஒருவனைக் கெடுத்தற்குப் பொறாமையினும் கொடிய தொன்றில்லை. அழுக்காறு உடையவனை லட்சுமி அணுகாள். மூதேவி குடிபுகுவாள். இதனை

*"அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும்"

என்ற மெய் வேதம் நன்கு விளக்கும். பொறாமைப்பட்டவர்கள் விருத்தி யெய்தியதுமில்லை பொறாமையில்லாதவர்கள் கெட்டதுமில்லை.

இதனை,

† "அழுக்கற் றகன்றாருமில்லை யஃதிலார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்"

என்ற மாதானுபங்கியாரின் திருவாக்கானு முணர்க. பொறாமையென்கிற கொடுவிடம் உள்ளத்தே ஒரு துளி தோன்றினும் உள்ள முழுதும் பாவி உடலையும் உயிரையும் புண்ணாக்கி அழிப்பதுமன்றி வேறு பயனுள்ள வேலையில் அறிவு செல்லவொட்டாது. பொய், கொலை, களவு, வஞ்சகம் முதலிய பாதகங்களைக் கைக்கொள்ளச்

---

* பொருள். "பிறர் செல்வங்கண்டவிடத்தே பொறாமையுடையவனை திருவானவள் தானும் பொறாமைப்பட்டு தனது தமக்கைக்குக் காண்பித்து நீங்குவாள்" என்றதாம்.

† இதன் பொருள், "பொறாமைப்பட்டு பெருகினவரும் இல்லை, அச்செயலில்லாதவருள் பெருக்கத்திலிருந்து நீங்கினவரும் இல்லை" என்பதாம்.

செய்து இருமையினுந் துன்பஞ் செய்வித்தலால் விவேகிகள் பொறாமைபோற் கொடியதொன்றில்லை என்றனர். ஆதலின் பகுத்தறிவுடைய மக்கள் பொறாமையை அடியோடறுப்பர். அடியோடறும் வழியே தேடும் முழுமக்கள் பொறாமைப் பேய்க்குட்பட்டுக் கெட்டலைந்து வீழ்வர்.

இது நன்கு புலப்படவென்றன்றோ நீதிநூலுடையாரும்.

மாங்கனி வாயிற் கவ்வி மரத்திடை யிருக்கு மந்தி
பாங்கர்நீர் நிழலைக் கண்டு பழமுறுங் குரங்கென் றெண்ணி
தாங்கரு மவாவிற் றாவிச் சலத்திடை யிறந்த தொப்ப
நீங்கரும் பொறாமை யுள்ளோர் நிலத்திடை கெடுவர்நெஞ்சே.

என்று கூறியுள்ளார்.

பிறர் கல்விசெல்வம் வீரம் முதலியன கண்டவிடத்து நாமும் அவர்போலாதல்வேண்டுமென ஊக்கங்கொண்டு முயன்று பெறுபவரே அறிவுடையாராவர். அவ்வாறன்றி பிறர் கல்வி செல்வம் வீரம் முதலியனகண்டு பொறாமைகொண்டு அவரைப்பற்றிப்புறங்கூறல் முதலியன செய்பவர் நாயினுங் கடைப்பட்டவராவர். நாய்க்கேனும் சிற்சில நன்மைகள் சொல்லப்படுகின்றன விவர்பாலிதுவு மின்மையின் கடைப்பட்டவரென்கின்றனர் போலும். இனிப்பொறாமையாற் கெட்டோரும் கெடுகின்றோரும் கெடுவோரும் பலர். இதற்குத் திருட்டாந்தமாக பொறாமையாற் கெட்டார் சரித்திரஞ் சில கூறுவாம்.

(இன்னும் வரும்) தி. அ. சுப்பையாபிள்ளை,
சுகந்தகுந்தளாம்பிகை திருவருட்டமிழ்ச்சங்கநிர்வாகி.
திரிசிரபுரம்.

## மாணிக்கஜோதி

(163-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஒரு பாத்திரத்தில் இரண்டு பந்தைப்போட்டு குலுக்கினால் என்ன நிலையிலிருக்குமோ அந்த நிலையில் சிறிதுங் குறைவில்லாமல் நாங்கள் இருவரும் இருந்தோம்.

நாங்கள் இருவரும் ஒருவரோ டொருவர் மோதிக் கொண்ட போது வேதனையில்லை. காயம் உண்டாகவில்லை. வண்டியில் மோதிக் கொண்டதினால்தான் காயங்கள்பட்டு இரத்தம் வழிய ஆரம்பித்தது. நானே உருண்டு மருண்டு இன்று செத்தோம் என்று நினைத்தேனானால் என்னோடிருந்த பெண்மணியைப்பற்றிச் சொல்லவேண்டுமோ? அவள் அலறின சத்தம் காதில் விழுகிறது அவளுக்குத் தேறுதல் சொல்லவாவது உதவிபுரியவாவது என்னால் முடியவில்லை "வீழ்வார்க்கு வீழ்வார் துணை" என்றபடி கூடவில்லாமல் நாங்கள் இருவருமே வண்டி-

உருண்டவேகத்தில் மோதிக்கொண்டோமென்றால் எங்கே உதவி செய்கிறது. வண்டி நாலைந்து முறை உருண்டதில் சிறிது வேகமும் குறைந்தது. நல்லவேளையாய் ஒருமாமுமங்கிருந்து தடுத்தது. அந்த மாம் தடுக்காதிருந்திருக்குமானால் வண்டி உருண்டு வேலிக்கு அப்பு றம்போய் விழுந்திருக்கும். வேலிக்கப் புறத்தே ஒரு பெரிய படு குழியிருந்தது. அதில் நாங்கள் விழுந்திருப்போமானால் எங்களுக்கு வேறு குழி தோண்டவேண்டியதேயில்லை.

பிறகு, வண்டி வேகமாக உருண்டு மாத்தில் தாக்கின அதிர்ச்சியில் உள்ளேயிருந்து வண்டியின் பின்பக்கவழியாக விசிறி எறியப்பட்டு பூமியில் வீழ்ந்தாள். நானே வண்டியின் முன்பக்க வழியாக விசிறி எறியப்பட்டு விழுந்தேன்.

அவள் தெனபுறத்தும் நான் வடபுறத்தும் எறியப்பட்ட அலங் கோலத்தைக் கண்டால் ஜட்காவண்டியில் ஏறவேண்டுமென்னும் ஆசை முற்றும் அற்றுப்போம் என்பதற்குச் சந்தேகமில்லை.

நான் நிலத்தில் விழுந்தவுடனே எனக்கு ஒரு தெளிவு உண்டா யிற்று, ஏனெனில் இனி நாம்உருள வேண்டுவதுமில்லை இனி நமக்கு ஆபத்துமில்லை என்ற எண்ணம் உதித்ததினாலே தான் தெளிவு உண் டானதும் இந்த வெட்கக்கேட்டை யாரும் தெரிந்தவர்கள் கண்டுவிட் டால் என்ன செய்வது என்று ஒரு எண்ணம் மனதி லுதித்தது. இதற்குள் கோயிலுக்குப் போவோரும் திரும்புவோரும் சீரங்கம்போக வோரும் அங்கிருந்து திரும்புவோருமாகிய ஜனங்கள் எல்லோரும் சூழ்ந்து வந்து கூடினார்கள். தென்புறத்தே விழுந்த பெண் தென் புாமாகிய யமபுரத்துக்குப் பயணம் புறப்பட்டவள்போல ஆடைகுலைய ஆபரணங்கள் கழலக் கூந்தல் விரிந்து சோத்தேகமெல்லாம் இரத்தம் வழிய பேச்சு மூச்சின்றிக் கிடந்தாளாகையாலும் அவளோடு கூட வந்த இரண்டுஆடவர்களும் அவள் நிலையைக்கண்டு "ஏ! பாலாம்பாள்! ஏ! பாலாம்பாள்! எங்களை மோசம் பண்ணிவிட்டுப்போனியா! நாங்கள் என்ன செய்வோம்! ஐயோ புறப்படும்போதே சகுனந் தப்பாயிருந் ததே அதையும் கவனிக்காமற் புறப்பட்டு விட்டோமே. இப்படிப் பட்ட ஆபத்தும் வருமா? வண்டியிலிருந்து விழுந்து சாவவா இவ்வ ளவு அவசரப்படுத்திக் கூட்டிவந்தாய்" என்று பல பல பன்னி அவா களா அழத்தொடங்கியதினாலும் கூட்டம் என்னிடத்தில் அதிகமாக வாாமல் அந்தப் பெண்மணியையே எல்லோரும் சூழ்ந்து கொண்டார் கள்.. சிலர் "ஐயோ பாவம்! யார் பெற்ற பெண்ணோ நடுவழியில் அவகேடாய் செத்தல்லோ போனாள்" என்பார்கள், சிலர் "சாகவில்லை உயிர் இருக்கிறது மூர்ச்சைபோட்டிருக்கிறாள்" என்பார்கள். சிலர் "பலமாக அடிபட்டிருக்கிறது கைகால் முறிந்திருந்தாலும் முறிந்தி ருக்கலாம்" என்றார்கள். சிலர் "கொஞ்சம் ஜலம் குடிக்கக்கொடுங்கள் முகத்திற்றண்ணீர் தெளியுங்கள் களைமாறும்" என்றார்கள். சிலர் ஓடிப்போய் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தார்கள். "பெண்ணென்

ளூற் பெயுமிரங்கும்" என்றபடி அங்குவந்து சூழ்ந்தவர்களில் அவளுக்காகப் பரிதாபப்படாதவரும் உதவி செய்யாதவரும் இல்லை சநதை சூழ்ந்துமுன் முடிச்சவிழ்க்கிகள் முந்துவார்களல்லவா. அங்கே சில முடிச்சவிழ்க்கிகள் தம்மை மறந்து அப்பெண்மணிக்கு உதவிசெய்யும் நல்லவர்களின் முடிச்சை கத்தரிக் கோல் கொண்டு கத்தரித்துக் கொண்டு ஓடிவிட்டனர். சிலர் அப்பெண்மணியின் நகைகளிற் சில கீழே கழண்டு கிடந்தனவற்றை எடுத்துக்கொண்டு *கம்பி நீட்டி விட்டார்கள். (*ஓடிவிட்டாகள்)

அப்பெண்மணியோடேவந்த இருவருமோ மிகத்துக்கத்துடன் அப்பெண் பிழைத்தெழுந்தாற் போதும் என்று வேண்டிய முயற்சிகளெல்லாம் செய்துகொண்டிருந்தார்கள். சிலர் "யார் யார் வண்டியில் வந்தது? எப்படி வண்டி விழுந்தது? குதிரை எங்கே? வண்டிக்காரனெங்கே? உள்ளே அகப்பட்டுக்கொண்டு உருண்ட இருவரில் அந்த ஆண்பிள்ளை எங்கே?" என்று இவைகளை விசாரித்து என்னை வந்து பார்க்கத்தொடங்கினார்கள். நான் அவ்வளவு மோசமில்லாமல் சில காயங்களுடனே இருப்பதையும் அதுவுந் தோன்றுதபடி இரத்தங்களையும் தூசியையும் துடைத்துக்கொண்டிருப்பதையுங்கண்டு சிலர் "இவன் கிழங்குபோலிருக்கிறானே! ஐயோ பாவம் அப்பெண்ணுக்குத்தான் நல்ல அடி" என்றும் "உள்ளேயிருந்த இவன் அவளுக்கு இந்த மாதிரி அடிபடாமற் பாதுகாக்கக்கூடாதா?" என்றும் பேசிக்கொண்டார்கள். இது என்ன தர்மசங்கடமாயிருக்கிறது நாம விழுந்தது பாரமல்ல ஒவ்வொருவரும் நமக்குப் பழியுமல்லவா சுமத்தவருகிறார்கள் இனி இங்கிருப்பது மரியாதையல்ல புறப்பட்டுவிட வேண்டுமென்று நினைத்து அந்தப்பெண்ணிருக்கு மிடத்திற்போய்ப் பார்த்தேன். அங்கிருந்தவர்களெல்லாம் என்னையும் அவளையும் பார்ப்பதும்எங்கள் இருவரையும்பற்றிப் பேசுவதுமாகவே இருந்தார்கள்.

அங்கிருந்தவர்கள் செய்த உபசாரத்தாலும் மருத்துவத்தாலும் அப்பெண்மணி களைதீர்ந்து சிறிது உயிர்வரப்பெற்றாள். அங்கிருந்த எல்லாரும் எமன் வாயிற்போன உயிர் திரும்பினால் எப்படிச் சந்தோஷப்படுவார்களோ அப்படி மகிழ்ச்சி அடைந்தார்கள். நானும் தெய்வானுகூலத்தால் பிழைத்தாளே என்று மகிழ்ச்சிகொண்டேன்.

இதற்குள் அங்கே "பீட்" இருந்த போலீஸ் சேவகர்களும் வந்துவிட்டார்கள். வண்டிக்காரனோ குதிரையை மூன்று மைலுக்கு அதிகமாய்த் தொடர்ந்தோடி குதிரையைப் பிடித்துக்கொண்டு வந்து சேர்ந்தான். அவனைச்சேவகர்கள் பிடித்துக்கொண்டு தங்கள் வீரத்தையும் அதிகாரத்தையும் சோர்வின்றிக்காட்டி எங்கள் விலாசம்முதலியவற்றை எழுதிக்கொண்டு வண்டிக்காரனைப் பிடித்துக்கொண்டு ஸ்ரீரங்கம் போலீஸ் ஸ்டேசனுக்குக் கொண்டுபோயினார்கள்.

அப்பெண் அதிக காயத்தோடும் வேதனையோடும் துர்ப்பலத்தோடும் இருந்தபடியால் அவளை அவள்கூடவந்த இருவரும் வேறு

பார்வைப்புறட்டலாமா? "சிவத்தைப்பேணிற் றவத்திற்கழகு" என்றல்லவோ தெய்வப்புலமை ஔவை செவ்வையாகச் சொல்லியிருக்கின்றாள், சிவத்தைப் பேணும் தவமில்லாமையினாலே தான் பார்வைப்புரட்டிப் பிழைபட்டதுபோலும்.

இன்றுநாயிருக்கிற எல்லோரும் ஆரம்பத்தில் ஆத்திச்சூடியில் "சிவத்தைப்பேணிற் றவத்திற்கழகு" என்று படித்திருப்பர். இந்த வியாசத்தைக் கண்டபின் அவர்களுக்கு எது உண்மையென்று மயங்குவாராகையால் இதைநான் எழுதலாயினேன். **கடவுட்பிரியன்.**

## வர்த்தமானங்கள்.

**மனுஷரைக் கொண்டுபோகும் காற்றாடி:**— காற்றாடியின் காரணத்தால் தான் பெஞ்சமின் பிராங்க்ளின் அமெரிக்கா சாஸ்திரி முந்தமுந்த மின்சார ஓட்டத்தைக் கண்டு பிடித்தாரென்று சொல்லப்படுகிறது இப்போது அமெரிக்காவில் காற்றாடியின் உதவியால் மனுஷர்கள் ஆகாயத்தில் பறக்கலாமென்று பரிட்சைசெய்து கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆறுமுதல் பதினேழு காற்றாடிகள்வரையில் ஒன்றாய் இணைக்கப்பட்டு ஆகாயத்தில் விடப்பட்டால் அவைகளில் மனிதன் உட்கார்ந்து 1000 அடிவரையில் கிளம்பலாம். இது தற்காலத்தில் கண்டுபிடித்த ஒரு நூதனம்.

**ஓர் யானைசெய்த கோலை:**— போதனையிலே ஒரு யானை பாகனை அக்கிரமத்திலடித்துக்கொன்றுபோட்டது காரணமேதென்பது வெளியாகவில்லை. அதிகாரிகள் மரணவிளக்கம் நடத்தப்போனபோது அந்த யானை பிரேதத்தைச் சுற்றிச் சுற்றி யுலாவி ஒருவரையுமணுகவிடாது கனைத்துக்கொண்டு நின்றது. அதன் மூர்க்கத்தைக் கண்டபோது வேறு யானையைக்கொண்டுவந்து அதன் மூலமாய் முரட்டியதை அப்புறப்படுத்துவித்தனராம்.

**தேன் துளியால் வந்த தேசச் சண்டை:**—ஒரு மகமதியன் கடைக்குப் போய்த் தேன் வாங்கினான் அதில் ஒரு துளி சிந்திவிட்டது. அதில் ஒரு ஈ மொய்த்தது அந்த ஈயை ஒரு பல்லி பிடித்தது அப்பல்லியை ஒரு எலிபிடித்தது அவ்வெலியை ஒரு பூனைபிடித்துத் தின்றது அப்பூனையைக் கடைக்காரன் நாய் கொன்றது கடைக்காரன் துலுக்கனை யடித்தான பிறகு துலுக்கனைச்சார்ந்த மகமதியர்கள் சண்டைக்கு வந்தார்கள் இப்படி இருபக்கத்தாரும் சண்டையிட்டுமிகவும் பிரமாதமானகலகமாக்கிவிட்டார்கள் இத்தனால் அற்பத்திலிருந்து பெரிய சண்டை யுண்டாகிறதென்றறிகிறோம்.

**வைதவ்யம்:**— ஸுமாத்ராவில் வசிப்பவர்கள் ஓர் விசித்திர ஆசாரம் கொண்டாடுவார்கள். விதவையான ஸ்திரீ தன் வீட்டில் ஓர் கம்பமூன்றிப் பாவுட்டா (Flag) ஒன்றைக் கட்டுவாள். அதுகிழியும் வரையில் மறுவிவாகமில்லை. துணி நாசமானால் அன்றோடு வைதவ்யம் முடிந்து வேறு வரனை மணக்கலாம்.

**ஒரு கோரமான குழந்தை:**—மலையாளத்தில் ஒரு ஸ்திரீ வாய் முழுதும் பற்களுடன் ஒரு சிசுவை யீன்றனள். அது நான்கு வயதானவுடன் அதன் முகம் 20 அல்லது 30 வயதுடைய வாலிபனைப்போல் தோற்றுகிறதாம், மிருகத்தைப்போல் உறுமுகிறதாம். உணவும் அபரிமிதமாய் உட்கொள்ளுகிறதாம். இதுவும் கலிகாலக்கூத்தே.

**ஒரு கிழவி கதி:**— ருஷியா தேசத்தைச் சேர்ந்த 'ஓரன்பர்க்' என்னும் மாகாணத்தில் பஞ்சமுண்டாகி அகவிலை குறைந்து ஜனங்களுக்குக் கஷ்டம் சேர்ந்ததாம். இதற்குக்காரணம் பிடாரியைப்போலிருக்கும் இந்தக் கிழவிதான் என்று எல்லோருங்கூடி ஒரு கிழவியை அடித்துக்கொன்று விட்டார்களாம்

நமது ஐந்தாவது ஜார்ஜ் மன்னரின் டில்லியில் நடக்கப்போகும் சக்ரவர்த்தி பட்டமகுடாபிஷேக ஞாபகார்த்தமாக திரிசிரபுரத்து இந்திய மிஷனரி சங்கத்தாரால் "இந்திய மிஷனரி வர்த்தமானி" எனப்பெயர் புனைந்த ஒரு கால் வருடப்பத்திரிகை மகுடாபிஷேக தினத்தன்று வரப்போவதாக வதந்தி. இது வெளிவருதலை அதி ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். திரிசிரபுரத்துக்கும் நல்ல காலம் வந்துவிட்டது. பல சங்கங்களும் பத்திரிகைகளும் வெளிவருகின்றன.

**சகோதரனைக்கொன்ற சண்டாளன்:**—சென்ற மீ 26உ கண்ணூரிலுள்ள காம்புபஜாரில் ஒருகொலைநேர்ந்தது. செட்டிபிள்ளை யொருவன் தன்சகோதரன் தன்பிள்ளையின் ஈமக்கிரியைக்குவாராமையைபற்றி அவனுடன் வாக்குவாதம்செய்து, வாய்ச்சண்டை, கைச்சண்டையாய், அவனைக் கத்தியால் வயக்கொத்திக் கொன்றோடிப்போனான். இவனும் அகப்படவில்லை. அவர்களுடைய தகப்பனாரும் பிள்ளைகளுடைய விலக்கப்போய்ப் படுகாயமடைந்தனர்.

**ஓர் போர்க்கப்பல் ஆழ்ந்தது:**—பிரான்சு தேசத்தில் துறைமுகப்பட்டணமாகிய மார்ஸேல்ஸ் என்னுமிடத்தில் லிபர்ட்டி என்னும் கப்பலில் நெருப்பு உண்டாகி 19-நிமிஷத்தில் ஆழ்ந்துவிட்டது. உயிர்ச்சேதம் சுமார் 350 என்று சொல்லப்படுகிறது

**கழுகு வாகனம்:**—மனிதரை முதுகிற்றூக்கிச் சுமந்து பறக்கும் கழுகுகளிருக்கின்றனவாம். அவை ஒரு மைல் உயரத்திற்குப்போயவிட்டால் ஒருவருக்கும் புலப்படாவாம்.

**கங்கைக்குப் பாலம்:**—கீழ்கங்கைப் பாலத்தின் வேலை இரண்டாம் தரம் தொடங்கியிருக்கிறது. இதற்குமுன் இப்பாலத்தின் வேலை சிறிது நடந்திருக்கிறது. இப்பாலம் 5387 அடி நீளமுள்ளதா யிருக்கும். இதன்மேல் இரட்டை ரயில்வே லயன் ரயில் பாதை மூன்று கல்கத்தாவுக்கும், வடவங்காளத்திற்கும் நேரடியான வழியாயிருக்கும். இப்பாலத்தின் வேலையால் கங்கை நீர் தேங்கி கரைகளையுடைத்துப் போகுமாகையால், அவ்வாறு நடவாதிருக்கும்படி 4,000 அடி தூரத்திற்கு இருபுறமும் அணைகட்டி வருகிறார்கள். சென்ற ஆண்டு 20,000 ஆள்கள் வேலை செய்தனர். இந்த அணையைத் தவிர வேறு மூன்றணையும் போடவேண்டுமாம். அவ்வணை சுமார் 5 மைலுக்குமேல் இருக்குமாம் இவ்விரண்டணைகளுக்குமாக 13, 65, 137டன் பாறைக்கற்கள் வேண்டுமெனப்படுகிறது இந்த வருஷமும் இவ்வளவு பேருக்குமேல் வேலை செய்வார்களென்று தீர்மானிக்கப்படுகிறது.

பெட்டைக்கோழிக்கு கொயினா என்ற மாத்திரையைக் கொடுத்தால் தினம் இரண்டு முட்டையிடக்கூடுமென்று பாஸ்ரன் என்ற ஓர் வைத்திய நிபுணர் கண்டுபிடித்திருக்கிறாராம்.

**போபால் மகாராணி:**—இங்கிலாந்தில் நமது சக்கிரவர்த்தியாருக்கு மகுடாபிஷேகம் நடைபெற்ற தினத்தன்று இவர்க்கு ஜி. ஸி. ஐ. இ. பட்டம் கொடுபட்டதுஸ்திரீகளில் முதல் முதல் பெற்றவர் இவரே ஆவார்.

நூற்றாறு வயதுள்ள ஒரு ஸ்திரீ இங்கிலாந்தில் வசிக்கும் ஒரு ஸ்திரீ தனது 106-வது வயது தினத்தை கொண்டாடினாள். இவள் சோர்வில்லாமல் வேலை செய்கிறாளாம்.

தற்கொலை:—பட்டின ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் புதன்கிழமை இரவு கொழும்பு ரெயில் வருகையில் ஒருவன் தண்டவாளத்திற் படுத்திருந்து தற்கொலை செய்துகொண்டான். தலை துண்டாக்கப்பட்டதாம்.

மோட்டார் வண்டி சேதம்:—இம்மாதம் 29தேதி கல்கத்தாவில் ரெனல்ஸினார்க்குச் சொந்தமான கோட்டார் வண்டியைப் பிரித்துத் துடைத்துக் கொண்டிருக்கும்போது, சிறுவனொருவன் அங்கு சிகரெட்டுப் பிடித்துப் போட்டான். அச்சிகரெட்டின் தீ பெட்ரோல் எண்ணெயில் பற்றி அதனால் அவ்வண்டிக்கு பழுதுண்டானதாம்.



பண்டிதர் K. S. கிருஷ்ணசாமி ஐயருடைய 'எலக்டிசிக்பாம்' என்னும் சூலைநிவாரணித் தைலம். இத்தைலத்தை மேலுக்கு தேய்ப்பதினால் வாதரோகம், முழங்கால் வீக்கம், இடுப்புநோய், பிடிப்பு, பக்கநோய், தலைவலி, ஒற்றைத்தலைவலி, மண்டையிடி, பல்யீர் வீக்கம், தொண்டை கம்மல், இருமல், மார்சளி, ஜலதோஷம், இசிவு, சுளுக்கு, தேள் கொட்டு முதலிய விஷக்கடி முதலிய வியாதிகளையும் குழந்தைகளுக்கு காணுகிற மாந்த யிழுப்பு முதலியவைகளையும் அதிசீக்கிரத்தில் சொஸ்தப்படுத்தும் ஓர் சிறந்த தைலம்.

விலை புட்டி 1-க்கு 0—12—0.

ஏஜண்டுகள், **P. கணேசரத்னம் பிள்ளை**
கடைத்தெருவு 86 நெ. கடை, சேலம் & **சர்மா & கோ,**
திருச்சினாப்பள்ளி தெப்பக்குளம்.
இவ்விடங்களில் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

---

# A VALUABLE ASSET FOR VACANCY SEEKERS.

## THE NATIONAL TYPE-WRITING INSTITUTION.

**Sanjeevi Row's lane [Near Little Market]**

*TRICHINOPOLY.*

**Imparts instructions in:—**

Type-writing — Book-keeping and
Shorthand — Commercial correspondence.

STUDENTS ARE COACHED UP BY SPECIALISTS AND PROFESSIONAL MEN HOLDING FIRST CLASS CERTIFICATES.

*Games:*—Special arrangements are **made for games** such as Badminton and Foot-Ball.

Scholarships are awarded to students **passing their** Examinations with distinction.

*For particulars apply to:—*

**Mr. V. N. Barathy.**
*Manager*

**வீரிய விருத்திக்கும் இழந்த பலத்தையும் நரம்புபடுத்துவத்தையும்**
**திரும்ப அடைவதற்கும் உபயுக்தமான**
**இரண்டு உயர்ந்த ஔஷதங்கள்.**

# மதன மஞ்சரி மாத்திரைகள்.

"நோயுள்ளவர்களுக்கும், நோயற்றவர்களுக்கும்,
ஆடவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் உபயோகமானவை."

1. இவை, ஜீரண சம்மந்தமான கோளாறுகளைப் பரிகரித்து நல்ல பசியை உண்டாக்குவன.
2. இரத்தத்தை சுத்திகரித்து விருத்தி செய்து தேகத்திற்கு நல்ல திருடத்தையும் மேனியையுங்கொடுப்பவை.
3. உடம்பில் ஏற்பட்ட எவ்விதநரம்புத்தளர்ச்சியையும் நிவர்த்தித்து நரம்பு ஸ்தானங்களுக்குப் படுத்துவத்தை அளிக்கத்தக்கவை.
4. கை, கால், கண், எரிச்சலைப் போக்கடித்து மூளையைக் குளிர்ச்செய்து ஞாபக சக்தியை விசேஷித்துத் தருவவை.
5. ஸ்திரீகளுக்குண்டாகும் கற்பப்பை சம்பந்தமான சகலவித துன்பங்களையும் நிவர்த்திப்பவை.

etc. etc.

**40-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா. 1.**

## நபும்ஸகத்வாரி கிருத்.

இக்காலத்தில் சாதாரணமாக வாலிபர்களுக்கு சகவாஸ தோஷத்தால் ஏற்படும் துர்ப்பியாசங்களால் உண்டாகும் ஜனேந்திரிய நரம்புத்தளர்ச்சிக்கும் ஆண்தன்மைக்குறைவிற்கும் கைகண்ட ஔஷதம்.

2-தோலா கொண்ட டப்பியின் விலை ரூ 1.

எங்கள் ஔஷதங்களையும், அவற்றின் ஆச்சரியமுண்டுபண்ணத்தக்க குணங்களையும் குறித்து, அவ்வௌஷதங்களை உபயோகித்து சௌக்கியம் பெற்றவர்களில் மகாராஜாக்கள், ராஜாக்கள், ராஜகுமாரர்கள், மந்திரிகள், ஜமீந்தார்கள், அமீர்கள் முதலானோர்கள். ஆயிரக்கணக்கான நற்சாக்ஷி பத்திரங்கள் நாங்கள் தேடாமலும், கேளாமலும் அனுப்பியிருக்கிறார்கள்.

மேலே சொல்லிய மருந்துக்களைப்பற்றியும் எங்கள் **வைத்திய வித்தியா** புஸ்தகத்தை வாசியுங்கள். அது சுகத்துக்கும் ஐசுவர்யத்துக்கும் **க்ஷேமத்துக்கும** பெரிய வழிகாட்டியாகும்.

இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, குஜராத்தி, முதலிய எந்த பாஷையில்வேண்டுமானாலும் இந்த புஸ்தகத்தை **இனாமாக** தபால் செலவுகூட இல்லாமல் அனுப்புவோம்.

லக்ஷக்கணக்கான புஸ்தகங்கள் இதுவரை செலவாயிருக்கின்றன.

**ராஜவைத்திய நாராயண்ஜி கேசவஜி.**

புரொப்ரைடர் ஆயுர்வேதோதய ஔஷதாலயா

**No. 177,** சைனாபஜார்ரோட் ஜமேதார் கட்டிடத்தெதிரில் சென்னை.

## சந்தாதாரர்கள்பால் வேண்டுகோள்.

எட்டு மாதகாலமாகியும் சில சந்தாதாரர்கள் பண மனுப்பாதிருக்கிறார்கள். அவர்களைச் சந்தாவை அனுப்பி உதவி செய்யுமாறு வேண்டுகின்றேம்.

பத்திராதிபர்.

## முறையீடு.

பத்திரிகை அனுப்புவதையெல்லாம் பெற்றுக்கொண்டிருந்தோரும், அனுப்பச்சொல்லியோரும். பத்திரிகையை 6 மாதம் வரைபெற்றுக்கொண்டிருந்து வி. பி. தபாலில் வந்த ஏழாவது பத்திரிகையை திருப்பிவிட்டார்கள்.

இவர்கள் பெருந்தன்மையும் பரோபகார குணமும் இருந்தவாறு மிக நன்றாய் இருக்கிறது! தமக்கு வேண்டும் வேண்டாமென்பதை 7 பத்திரிகை வரையிலும் தெரிவியாதிருந்து விட்டனரே. 3 பைசா செலவிட்டு ஒரு கார்டு எழுத விருப்பமில்லாதிருந்தாலும் வந்தபத்திரிகையை திருப்பிவிட்டிருந்தாலும் நன்றாயிருந்திருக்குமே. வி. பி. யில் அனுப்பினபின் திருப்புவதென்பது எத்தகைய சிறப்புடையதோ அறியேம். இத்தனைமாதம் வாங்கிக்கொண்டிருந்து திருப்புவது நாகரீகமாமா? இதுவும் தெரியாதிருப்பரா!

பத்திராதிபர்.


"பாலச்சந்திரிகா"

இது ஒரு அருமையான தமிழில் எழுதிய குழந்தைவைத்திய புத்தகம். வயித்தியர்களின் உதவியின்றியே தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை நோய் வாராமற் காத்துக்கொள்ளலாம். இது ஒவ்வொரு தாய்மாரின் கையிலும் அவசியம் இருக்கவேண்டியது இது பல பெரியோர்களாலும் டாக்டர்களாலும் நன்கு மதிக்கப்பட்டிருக்கிறது. முதல் பதிப்பு அநேகமாகச்செலவாகிவிட்டது. பத்திரிகைகளிலெல்லாம் சிறப்பாகப்புகழப் பெற்றிருக்கிறது.

**V. P. Aiyer.**

*Belief Relief Medical Hall Trichy.*